Regd. No. M. 4900. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 ஈரோடு 8-11-1947 சனிக்கிழமை மலர் 9.

## தீபாவலியும் திராவிடர்களும்

(ஈட்டி எழுதுவது)

★

திராவிடர்கள் தீபாவலி விழாவைக் கொண்டாடுதல் கூடாது எனத் திராவிடர் கழகம் எத்தனையோ ஆண்டுகளாக எடுத்துக்காட்டி இடித்துக்கூறி வந்திருக்கின்றது. ஆனால் எத்தனை தமிழர்கள்—திராவிடர்கள் இதனை உணர்ந்தார்கள்? தீபாவலிக்குக் கூறப்படும் கதையை நீங்கள் எப்போதாவது சிந்தித்தீர்களா? முதலில் நீங்கள் கதையைச் சிந்தியுங்கள்.

"மக்கள் மக்களாகவே வாழவேண்டும்" என்றும், "வாழ்க்கை வாழ்வதற்கே" என்றும் கூறி விளக்கி வருவதையே வினையாகக் கொண்ட திராவிடக்கழகம், மக்கள் மகிழ்ந்து (மகிழ்வதாய்க் கருதிக்கொண்டு) கொண்டாடும் ஒரு விழாவை ஏன் கொண்டாடக்கூடாது என்று கூறுகிறது?

தீபாவலியைத் திராவிடர்கள் கொண்டாடக்கூடாது என்பதற்குத் திராவிடர் கழகம் எந்தெந்தக் காரணங்களைக் கூறி வருகின்றதோ, அக்காரணங்களைச் சரியில்லை என்றோ தவறானவை என்றோ இதுவரை யாருமே மறுத்துக்கூறவில்லை. தீபாவலியின் பெயராலே மலர்கள் வெளியிட்டு மக்களை மடமையில் ஆழ்த்தும் மகானுபாவர்கள்கூட மறுத்துக் கூறவில்லை.

பல ஆண்டுகளாகக்கூறி எழுதி வந்தும், கூறுவதும் எழுதுவதும் பயனில்லை என்று சொல்லுவதுபோல உங்களிற் பலர் தீபாவலியைக் கொண்டாடிக்கொண்டிருக்கும்போது, திராவிடர் கழகம் மேலும் மேலும் ஏன் எடுத்துக் கூறி வரவேண்டும்? "செவிடன் காதில் சங்கூதியது" போலவும் "விழலுக்கு நீர் பாய்ச்சுவது" போலவும் பயன் தராத ஒரு செயலை ஏன் வற்புறுத்தி வர வேண்டும்? இவ்வாறு வற்புறுத்துவதால், ஏதேனும் பொருள் வரவுமுண்டா? புகழுண்டா? இவைகளையும் சிந்தித்துப் பாருங்கள்.

தீபாவலிக் கதையின் சாரம் என்ன? வலிமை மிகுந்த பேரரசன் நரகாசுரன் என்பவன், தந்திரச் செயல் மிக்க கிருஷ்ணன் என்பவனால் போரில் கொல்லப்பட முடியாமற் போக, கிருஷ்ணனின் மனைவியான சத்தியபாமை என்பவளால் கொல்லப்பட்டான். கொல்லப்பட்டது பொழுது புலருவதற்கு முன்னால், (4 மணியளவில்) ஆதலால் தீபாவலியைப் பொழுது புலருவதன் முன்னம் கொண்டாடவேண்டும் என்பதாகும்.

இந்தக் கதை நடந்திருக்க முடியுமா? பன்றிக்கும் பூமிக்கும் பிள்ளை பிறக்குமா? பிறந்த குழந்தை அசுரனாய் இருக்க முடியுமா? என்று கேட்டால் நீங்கள் என்ன விடை கூறுவீர்கள்?

ஏன் நடந்திருக்கக்கூடாது? இது கலிகாலத்தில் நடந்ததில்லையே? எத்தனையோ யுகத்திற்கு முன்னால் நடந்ததை நாம் இல்லை என்று எப்படி சொல்ல முடியும்? நடக்காதிருந்தால் எழுதிவைத்திருப்பார்களா? இத்தனை காலமாகக் கொண்டாடித்தான் வருவார்களா? ஆதலால் நடக்கவில்லை என்று நாம் கூற முடியாது. நடந்துதான் இருக்கவேண்டும் என்று நீங்கள் கூறினாலும் கூறலாம்.

எத்தனையோ யுகத்திற்கு முன்னால் நடந்ததற்கு, இந்தக் காலத்தில் வாழுகின்ற நாம் ஏன் கொண்டாடவேண்டும்? எந்த யுகமாயிருந்தாலும் பூமி, பூமியாகவும் பன்றி பன்றியாகவுந்தானே இருந்திருக்க முடியும். அப்பொழுது தானே அந்தப் பெயர் அவைகளுக்குப் பொருந்தும். பூமியைப் பாயாகச் சுருட்ட முடியுமா? சுருட்டினவன் எங்கிருந்து சுருட்டினான். பூலோகம் என்று சொல்லும்போது கடலும் பூலோகத்தில் உள்ளதுதானே. இவையெல்லாம் யாரையார் நம்ப முடியும்? இது எவனோ அறிவு மயங்கிய நிலையிலே எழுதியிருக்கின்றான். இதை யாருமே ஒப்புக்கொள்ள முடியாது என்று நீங்கள் கூறினாலும் கூறலாம்.

நாம் கண்ணால் பார்க்காத சங்கதி. புத்தகத்தில் என்னமோ எழுதி வைத்திருக்கிறது. எழுதினவர்கள் முழுப் பொய்யாய், நடவாததாய் ஏன் எழுதப்போகின்றார்கள்? கொஞ்சங்கூட நிஜமில்லாமலா இருக்கும்? ஏதோ ஒன்று என்றால் பத்து நூறு என்று பெருக்கிச் சொல்வதில்லையா? அதுபோல நடந்ததையும் நடவாததையும் சேர்த்து எழுதி வைத்திருக்கலாம் என்று நீங்கள் கூறினாலும் கூறலாம்.

இவ்வாறு கூறிய விடைகள் மூன்றிலும் ஏதேனும் ஒன்றுதான் உண்மையாய் இருக்க முடியும். ஒன்று உண்மையாய் இருந்தாலுங்கூட திராவிடர்கள் கொண்டாடலாமா? அசுரன் என்பது யார்? என்றுதான் திராவிடர் கழகம் கேட்கின்றது.

நரகன் அசுரன் என்ற இரு சமஸ்கிருதச் சொற்கள் நரகாசுரன் என்று சொல்லப்படுகின்றது. நரகன், நரகலோகத்தில் வாழ்பவன். அல்லது நரகலோகத்தில் வாழ்பவனைப் போன்றவன் என்று பொருள்படும். அசுரன், சுரன் அல்லாதவன் என்று பொருள்படும். நரகலோகத்தில் வாழ்பவனான சுரனல்லாதவன் என்று விரிந்த பொருள்

ஆரியர்கள், தங்களுக்கு மாறுபட்டவர்களை அசுரர் என்றும், அரக்கர் என்றும் கூறுவர் என்பதும், அவர்களின் [illegible]களையும் பழித்துப் பேசுவர் என்பதும், அவர்களின் வேதங்கள் கூறுகின்ற உண்மை. ஆரியர்களின் இப்போக்கை யொட்டியே ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு மதமும் வேறு இனத்தையும் வேறு மதத்தையும் பழித்துப் பேசி வந்திருக்கின்றன. பழங்காலத் திராவிடர்கள் ஆரியர்களை மிலேச்சர் என்றே கூறிவந்திருக்கின்றனர். [illegible] மற்ற மதத்தவரை

அஞ்ஞானிகள் என்று இன்றைக்கும் கூறுகின்றனர். இஸ்லாமியர்களும் மற்றவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று கூறுகின்றனர் என்ற செய்திகளோடு ஆரியர் கூறும் அசுரர் என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால், மாறுபடுவோரைக் குறிப்பிட்ட சொல்லே அசுரர் என்பது நன்கு விளங்கும்.

சுரர் என்றால் சுராபானம் செய்பவர் என்றும் அசுரர் என்றால் சுராபானம் செய்யாதவர் என்றும் வைதீகக் கருத்துக்களைக் கூறும் "பரிபாடலே" கூறுகின்றது. அதாவது பழங்கால ஆரியர்கள் சோமபானம் என்ற மதுவை சாக்குடுக்கையில் கொண்டு பருகி வந்தார்களாதலால் அவர்களுக்கு சுரர் என்றும் அசுரர் என்போர் அவ்வாறு செய்யாதவர் என்றும் பரிபாடல் கூறுகின்றது. காலப் போக்கில் சுரர் என்றால் தேவர் எனவும் அசுரர் என்றால் தேவரல்லாதவர் எனவும் இதன் பொருள் மாறுபட்டுப் புராணங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. எப்படியிருப்பினும் சுரர் என்பவருக்கு மாறுபட்டவர் அசுரர் என்பது உண்மை. சுரர்களே பூசுரர்கள் என்பதும் பார்ப்பனர்கள் பூசுரர்கள் (பூ தேவர்கள்) என்று தங்களை எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் யாரும் மறுக்க முடியாத உண்மை. ஆக அசுரர் என்போர் ஆரியருக்கு (பார்ப்பனருக்கு) மாறுபட்டவர் என்பதே இதுவரை எழுதியதின் கருத்து.

ஆரியருக்கு மாறுபட்டவர்கள் திராவிடர்கள் தானா? வேறு இனத்தவரையும் அவர்கள் பழித்துப் பேசியிருக்கலாமே? என்று கேட்கலாம். இந்தியத் துணைக் கண்டத்தில் ஆரியரை எதிர்த்தவர், ஆரியர் நடத்தையை வெறுத்தவர், என்று கூறப்படுவதெல்லாம் திராவிடரையே குறிப்பதாகும் என்று நான் திட்டமாக வலியுறுத்திச்சொல்ல ஆசைப்படுகின்றேன். வேறு இனம் ஆரியரை இந்நாட்டில் வெறுத்தது—எதிர்த்தது என்பதற்குச் சான்றுகளே கிடையாது. மேலும் தீபாவலி போன்ற விழாக்கள் வடநாட்டிலும் கொண்டாடப்படுகின்றதையும் ஆங்கு அவற்றிற்கு வெவ்வேறு கதைகள் கூறப்படுவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். என்ன முடிவுக்கு வரமுடியும்? ஆரியர்கள் குடிபேறியகாலத்தில் அவர்களின் பழக்க வழக்கங்களையும் நாகரீகங்களையும் வெறுத்து ஒதுக்கிய திராவிடர்களையே ஆரியர்கள் அசுரர்கள் என்று பழித்தனர் என்ற முடிவிற்குத் தான் வரலாமே ஒழிய வேறு என்ன? இம்முடிவிற்கு வந்தால் திராவிடர்கள், இத்தீபாவலியை உண்மையாயிருந்தாலும், பொய்யாய் இருந்தாலும் உண்மையும் பொய்யும் கலந்ததாயிருந்தாலும், கொண்டாடலாமா? என்பதை இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள்.

# தீபாவலி.

★

- அசுரனாகிய இரணியாட்சன் பூமியைப் பாயாகச்சுருட்டி எடுத்துக்கொண்டு சமுத்திரத்திற்குள் போய் பாதாளத்தில் ஒளிந்து கொண்டானாம்.
- மகாவிஷ்ணு வராகவதாரம் (பன்றி வடிவம்) தாங்கி சமுத்திரத்திற்குள் போய் அசுரனைக்கொன்று, இரு தந்தங்களுக்கிடையே பூமியைத் தாங்கிக் கொண்டுவந்து பழையபடி விரித்தாராம்.
- பூமி தன்னை அசுரன் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு வந்து காப்பாற்றியதற்கு நன்றியறிதலாக அந்தப் பன்றியைச் சேர விரும்ப, விஷ்ணு அவதாரமான பன்றி உடன்பட்டுச் சேர உடனே ஒரு குழந்தை பிறந்ததாம். அதுதான் நரகாசுரனாம்.
- நரகாசுரன் தேவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) செய்து வந்த அட்டூழியங்களைத் தாங்காது விஷ்ணுக்கடவுள், தனது மனைவி சத்தியபாமையுடன் சென்று அசுரனிடம் போரிட, கடவுள் (கிருஷ்ணபரமாத்மா) மூர்ச்சையாகி விட, மனைவியாகிய சத்தியபாமை இரவு நேரத்தில் கொன்றாளாம்.
- இந்த அசுரனைக்கொன்றதற்கு மகிழ்ச்சியடைந்து அந்த நாளைக் கொண்டாடுவதுதான் தீபாவளியாம்.

★

திராவிடத் தமிழ்த் தோழர்களே!

இக் கதையை நீங்கள் நம்புகிறீர்களா?
இது மனிதத்தன்மை வாய்ந்ததா?
திராவிடர்களைத்தானே அசுரர்கள் என்பதாக
மனு முதலிய சாஸ்திரங்கள் ஆதாரங் காட்டுகின்றன.
ஆகையால் மானமுள்ள திராவிடத் தமிழ் மக்களே!
தீபாவளி கொண்டாடி இழிவைச் சுமக்காதீர்கள்.

இனி தீபாவலி என்ற சொற்களை ஆராய்ந்து பாருங்கள். தீபம்—விளக்கு ஆவலி—வரிசை என்று தரும் சமஸ்கிருதச் சொற்களே இவை. தமிழ் நாட்டில் இன்று கொண்டாடப்படும் விழாக்களுக்குள் இத்தீபாவலி ஒன்றுதான் முதன்மையான இடத்தைப் பெற்று வருகின்றது என்பதை எண்ணிப்பார்த்து, தமிழ் நாட்டில் தமிழர்கள் கொண்டாடும் ஒரு விழா வன் தமிழ்ச்சொல்லாக இல்லை என்பதையும் எண்ணிப்பாருங்கள். ஒரு வேளை முன்பு இருந்திருக்கலாம். பிறகு அது மறைந்து, இந்தச் சமஸ்கிருதச் சொற்கள் ஆட்சிக்கு வந்திருக்கலாம் என்றெண்ணுவதற்கும் இடமில்லை. ஏனென்றால் மிகப் பழமையான இலக்கியம் என்று புகழப்படும் சங்க இலக்கியங்களில் கூட, (அவைகள் ஆரிய நாகரீகம் நிறைந்து காணப்படுகின்ற நிலையிலும்) தீபாவலி என்ற விழாவைப் பற்றியோ, அதன் செய்கைகளைப்பற்றியோ ஒன்றுமே இல்லை. தீபாவலியைக் குறிக்க வேறு தமிழ்ச் சொல்லே இல்லை என்றால், இந்த விழா தமிழ் நாட்டில்—திராவிட நாட்டில் எவ்வாறு ஆதிக்கம் பெற்றது? இதை நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

தீபாவலி என்பது தமிழ்ச் சொற்கள்

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

# நாஞ்சி திராவிடக் கழகம்,

நாகர்கோவில்.

அன்புடையீர்!

திராவிடப் பெருங் குடிமக்கள், சமூகம், பொருளாதாரம், அரசியல் மூன்றிலும் சமத்துவம் பெற, திராவிடக் கழகம் வேலைசெய்து வருகிறது.

சமூகத்துறையில் ஜாதி, மத, கடவுள், வேறுபாடின்றி "ஒன்றே குலம், ஒன்றே மதம், ஒன்றே தெய்வம்" என்ற ஜீவாதார தத்துவத்தை நிலைநாட்டுவதிலும்,

பொருளாதாரத் துறையில் ஒருவர் மற்றவரைச் சுரண்டி வாழும் தன்மையை அகற்றி, தென்மொழி பேசும் இனத்தினர் சேர்ந்து வாழும் நாட்டை ஒன்றசேர்த்த, தென்நாடு தென்நாட்டவர்க்கு ("திராவிடநாடு திராவிடர்க்கு") என்ற மூலாதார அடிப்படையிலும்

அரசியல் துறையில் மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப்பட்டு, ஆட்சி நடைபெறும் காலத்திலும் மக்கள் யாவர்க்கும் எல்லா ஸ்தானங்களிலும் சரிபங்கு கிடைப்பதற்கு ஜாதிமத வேறுபாடு இந்நாட்டிலிருக்குமட்டும் மெஜாரிடி மைனாரிடி என்று ஒதுக்கப்பட்டும், சிறு மைனாரிட்டி என்று ஒதுக்கப்படாமலிருக்குமட்டும் எல்லா சமூகங்களும் சரிநிகர் பங்குகள் கிடைக்கும் முறையான "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்" என்ற சமூக சமத்துவ சம உரிமையான, மக்களின் பிறப்புரிமையை நிலைநாட்ட நாகர்கோவிலில் ஸ்தாபித்திருக்கும் நாஞ்சித் திராவிடக் கழகத்தில் எல்லோரும் அங்கத்தினர்களாகச் சேர வேண்டுகிறோம்.

குறிப்பு:- இந்த நோக்கங்களை ஒப்புக்கொண்டு செயல்புரிய முன்வரும் எந்த சங்கங்களிலும், இயக்கங்களிலும் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராகவிருக்கிறோம்.

தங்கள் ஊழியர்கள்,

R இராமலிங்கம், தலைவர்.
E. பலவேசம், பொருளாளர்.
S. வன்னியப்பெருமாள், பொதுக்காரியதரிசி.

## பெரியார்

ஈரோடு, நவ. 8—

பெரியாரவர்கள் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதால் வெளியூர்க்கூட்டங்களுக்குச் செல்வதை நவம்பர்மாத முடிய நிறுத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். நாளை இங்கிருந்து கன்னியாகுமரி சென்று முழு ஓய்வு எடுத்துக் கொள்வார்கள்.

---

திருவிதாங்கூரில் வாழும் தமிழர்கள், திராவிடர்கள் என்ற பட்டியலிலே சேர்ந்து, "திராவிட இனம்" விடுதலை பெற முயலுவதே தக்கதெனக்கொண்டு நாகர்கோவிலிலே உள்ள, திராவிடத் தமிழர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையே இது.

தோழர்களே! உங்கள் முயற்சி நல்ல முயற்சி நம் திராவிட இனம் செழிப்புறச் செய்யத்தக்க ஒரேவழி, சென்னை மாகாணத் திராவிடர்கள் எப்படியிருந்தபோதிலும் வராயினும், எம்மொழி பேசுபவராயினும் ஆரியச் சாதி நீங்கிய எச்சாதியினராயினும் திராவிடர் என்று தம்மையுணர்ந்து அவ்வழியில் நின்று பாடுபடுதல் தக்கது என்க் கருதிப் பாடுபட முன்வந்திருக்கும் உங்களின் முயற்சிக்கு மத்தியத் திராவிடக் கழகம் தன்னால் இயன்றளவு எல்லா வகையிலும் உதவி செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறிவிக்கிறோம்.

மேலும் உங்களின் முயற்சி நாகர்கோவில் போன்ற தமிழ்மொழி பேசும் பகுதியில் மட்டும் இல்லாமல் மலையாளமொழி வழங்கும் திருவிதாங்கூர்ப் பகுதி முழுவதிலும் செல்லட்டும்! திராவிடக்கழகத்தின் சீரிய நோக்கங்கள், மலையாளப் பொதுமக்கள் மனதில் பதியட்டும்! ஆரியம் திருவிதாங்கூரை ஆண்டுவரும் நிலையினால் ஏற்பட்ட அலங்கோலத்தை, உண்டான சீர்கேட்டை, கவிந்திருக்கும் இருளை, மாற்றி அழித்துப் போக்கும் மங்காத ஒளியாக விளங்கட்டும்; என்ற ஆசையையும் உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

தமிழர் மலையாளியர் என்ற வேறுபாட்டை நீக்கி, இருவரும் ஓரினம் (திராவிடர்) என்பதை உணர்த்தி, அவரவர் உரிமையில் மற்றவர் தலையிடாது, அரணமைத்து, சுரண்டும் கூட்டமான பனியாப் பார்ப்பனக் கூட்டுக் கொள்ளையிலிருந்து விடுதலை பெறவதே உண்மையான விடுதலை யென்பதை, விடுதலை வேட்கையுடைய வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் உணர்த்தவும், அவ்வழியே நின்று பாடுபடவும், முன்வந்திருக்கும் உங்கள் செயலை, தமிழகத்தது திராவிடர்கள் பெரிதும் கவனித்து வருகின்றார்கள். ஆரிய நச்சிற்கு ஆளான தமிழகத்தைக் காட்டிலும் அந்நச்சிற்குப் பலியான மலையாளம், திராவிட இன உணர்வைப் பெறச்செய்யும் முயற்சி மிகப்பெரிது என்றாலும், மிகத் தேவை என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

செயல் பெரிது என்ற சிந்தனை இருக்கட்டும்! எதிர்ப்புக் எதிரிகளின் எக்காளம் கலந்த கேலியும், உங்களுக்கு வீரவுணர்ச்சி யூட்டவல்ல வீரவுரையாக விளங்கட்டும்! சங்கடத்தைக் கண்டு சலியாதீர்! விடுதலை பெறும் மார்க்கத்தைக் கண்டோம், வெற்றி பெறும்வரை உழைப்போம்! உழைத்துக்கொண்டே சாவோம்! அல்லது உழைப்பிலே வெற்றி காண்போம்! என்ற தமிழகத்துத் திராவிடர்களின் உறுதியை நாம் நாஞ்சித் திராவிடக் கழகத்தாருக்கு எடுத்துக் கூறுகிறோம்.

---

உலகம் பூராவும சராசரி ஒரு நிமிடத்தில் 68-ம, ஒரு நாளில் 97,920-ம் ஒரு ஆண்டில் 35,740,800ம் மரணங்கள் ஏற்படுகின்றனவாம்.

குடி அரசு

8–11–47 சனிக்கிழமை

# ஜமீன் இனாம் மடம் ஒழிப்பு

## II

சென்ற வாரக் குடி அரசில் ஜமீன்..........ஒழிப்பு மசோதாப் பற்றி எழுதியிருந்ததில், மனித ஜமீன்தார்–சரிகைத் குல்லா ஜமீன்தார்களை மட்டும், ஒழித்தால் போதாது என்றும், அவர்களுக்கும் பணம் பரிகாரமாய் (நஷ்டஈடாய்) கொடுத்து அவைகளை ஒழிப்பது அர்த்தமற்றது என்றும், ஜமீன்தாரர்களைக் காட்டிலும் ஏராளமாகப் பணத்தைச் சுலபமான வழியில் சம்பாதித்து, ஜமீன்தாரர்களைக் காட்டிலும் அதிகச் செல்வவான் ஆகும்படி ஒரு பக்கத்தில் மக்களை அனுமதித்துக் கொண்டு, ஜமீந்தார்களை மாத்திரம் ஒழிப்பதாகச் சொல்லப்படுவதில் சிறிதும் அர்த்தமில்லை என்றும், எந்த விதத்தில் செல்வவான்களாய் இருப்பதும், எந்த விதத்தில் மக்கள் செல்வத்தை ஒரு சிலர் குவித்துக் கொள்வதும், மனித சமுதாயத்தில் பெரும்பாலோர்க்கு மனக்குறையும், தொல்லையும், தரித்திரமுமே ஏற்பட இடமுண்டாகுமென்பது ஆகவும் எழுதி விட்டு, மற்றவற்றை அடுத்தவாரம் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தோம். அந்தப்படி, இவ்வாரம் சிலவற்றைக் குறிப்பிடுகின்றோம்.

“ஜமீன்தாரர்கள் என்பவர்கள், நாட்டில் இருக்கக்கூடாது. அவர்கள் நாட்டிற்குத் தேவையில்லை” என்றெல்லாம் சொல்லப்படுவதற்குக் காரணமென்ன? எதனால் மக்கள் இம்மாதிரி கருத நேரிட்டது? இவை முதலில் சிந்திக்கப்படவேண்டும்.

முடிவாகச் சொல்லவேண்டுமானால், சகலமான தொழில் முறைகளையும் வியாபாரங்களையும் தேசிய மயமாக்கப்படவேண்டும் என்கின்ற தத்துவமே, ஜமீன்களையும் ஒழிக்கவேண்டும்; அதாவது ஜமீன்களையும் சர்க்கார் ஏற்றுக் கொண்டு, அவற்றின் வரும்படியைச் சர்க்கார் (பொது ஜனங்கள்) அடையவேண்டும் என்பதுதான் என்று கருதுகின்றோம்.

இந்தப்படியாக ஏன் செய்ய வேண்டும்? சர்க்காரே எல்லாவற்றையும் ஏன் செய்ய வேண்டும்? என்பதற்கு முக்கியமான காரணமென்னவென்றால், பொது மக்கள் நலத்திற்காக, பொது மக்கள் தேவைக்காக, என்று செய்யப்படும் எப்படிப்பட்ட காரியங்களாலும், தனிப்பட்ட எந்த மனிதனும் லாபம் அடையக்கூடாது; பொருள் சேர்க்கக்கூடாது என்பதேயாகும். ஏனெனில் பொது மக்கள் செல்வத்தை சிலர் குவித்துக் கொள்ளுகிறார்கள் என்பதாலேயே.

பொது ஜன சர்க்கார் என்பது உண்மையான தன்மையில் இருக்க வேண்டுமானால், அந்தச் சர்க்கார் செய்யவேண்டிய வேலைகளில் இதுவே முக்கியமானதாகும். இந்தக் கருத்தின்படிதான் நாம் ஜமீன்தாரர்கள் விவசாய பூமிகளின் பெயரால் ஏன் இவ்வளவு பணம் அடைகின்றார்கள்? இவர்கள் இந்தப் பணத்தை வரும்படியாக அடைவதில் நாட்டிற்கு—நாட்டு மக்களுக்கு என்ன லாபம்? என்று கருதியே அவைகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்கின்றோம். இதற்கு ஆக, அவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது என்று ஏற்பட்டு விட்டால், இந்தக் கருத்தே ஈடேறாமல் போய் விடுகின்றது. அதனாலேயே ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கக் கூடாது என்கின்றோம்.

ஜமீன்தாரர்கள் நிலைமையே இப்படியானால், இனாம்தாரர்கள் என்பவர்கள் கதி அடியோடு அந்தத் தன்மையே ஒழிக்கபடவேண்டும். ஜமீன்தாரர்களுக்காவது ஒரு பாத்தியமுண்டு என்னலாம். அதாவது, இன்றைய முறையில் பலர் பல தொழில் வியாபாரம் செய்வது போலவும், சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே அனுபவித்து வருகின்ற பரம்பரைச் சொத்து வழி போலவும், நடந்த காரியங்களால் பொருள் சேர்ந்து விலைக்கு வாங்கப்பட்டதும், வார்சு உரிமையானதுமாகவே இருந்து வருகின்றது. ஆனால் இனாம்களுக்கு இந்தச் சாக்குப் போக்கான உரிமை கூடக்கிடையாது.

இனாம்கள், பெரிதும் பொது ஜன நன்மைக்கென்றே ஏற்பட்டவைகள். அதுவும், பெரிதும் மத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்பட்டவைகளாகும். அதுவும் எவ்வகையிலும் பாடுபடாத மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாத சொத்தை இனாமாகக் கொடுத்ததாகும். இதில் இனாம்தாரர்கள் தங்களுக்கு எவ்வித பாத்தியமும் கொண்டாடுவதற்கு இடமேயில்லை. இனாம் சொத்துக்களின் வரும்படியினால் ஏதாவது பொதுமக்களுக்குச் செய்யப்படவேண்டிய காரியம் இருக்குமானால், அதைச் சர்க்காரரே அவசியமென்று கருதினால், சர்க்காரே அதை நிறைவேற்ற ஒரு இலாகாவின் மூலம் ஏற்பாடு செய்துவிட்டு, அதற்காக ஏற்பட்ட—விடப்பட்ட சொத்துகளை சர்க்கார் பேர் மாற்றப்படுவதுபோல் சுவாதீனம் செய்துகொள்ள வேண்டியதே நியாயமாகும். இதற்காக நஷ்டஈடு யாருக்கு, எதற்கு, என்ன அவசியத்திற்குக் கொடுக்கப்பட

## உறுப்பினர் சேர்க்கவும்

★

ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் இந்த ஆண்டுக்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையை உடனே துவக்கி பெருவாரியாக புது அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டுமென்றும் பழைய அங்கத்தினர்களிடமும் இவ்வாண்டு சந்தாத் தொகையை வசூலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகம் வேண்டுவோர், “விடுதலை” நிலையத்திற்கு எழுதவும்.

ஈ. வெ. ராமசாமி.

வேண்டும் என்பது நமக்குப் புரியவில்லை.

இனாம் சங்கதி இப்படியானால், மடத்திற்கும் கோவிலுக்கும் சொத்துகள் எதற்காக விடப்பட்டிருக்க வேண்டும் என்பதை யோசித்தால், பொதுமக்களின் அறியாமையினாலும் சர்க்காரின் பொறுப்பற்ற தன்மையினாலும் என்பதல்லாமல் வேறு காரணம் ஒன்றும் சொல்வதற்கில்லை. மடத்தின் சொத்து, கோவிலின் சொத்து என்பவைகளால் பொது மக்களுக்கு என்ன பலன் ஏற்படுகின்றது? என்பதும், அந்தப்பலன்களை விளைவிக்க அந்த ஸ்தாபனங்களுக்கு இவ்வளவு சொத்துகள், வரும்படிகள் அவசியமா? என்பதும், சிந்திக்கவேண்டிய முக்கிய காரியமாகும்.

இன்றையக் காலம் பகுத்தறிவுக்காலம். கடவுள்களின் அம்சம் கடவுள்களின் தாசர்கள், கடவுள்களின் பிரதிநிதிகள், என்று கருதப்பட்டுவந்த மன்னர்கள்—மன்னாதி மன்னர்கள்—சக்கரவர்த்திகள் எல்லாம் பஞ்சாய்ப் பறக்கும்படியான இக்காலத்தில், பல அரசர்கள், சக்கரவர்த்திகள் ஓடி ஒளிந்துகொண்டு தங்களின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுகின்ற இக்காலத்தில், மடாதிபதிகளும் பொம்மைக் கடவுள்களும் இருந்துகொண்டு, இவ்வளவு செல்வங்கள் எதற்காக அவற்றின் செலவுக்கு ஆக என்று ஏன் விட்டுக்கொண்டிருக்க வேண்டும்?

ஒரு மடாதிபதிக்கு, அவ்வளவு செல்வத்தின்மீது ஆட்சிபுரியும்படி, அவ்வளவு வரும்படி செலவழிக்க வேண்டியதாக பொது வேலை, அல்லது பொது அவசியம் என்ன இருக்கின்றது? என்று சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

ஜமீன்தாரர்களைவிட மடாதிபதிகள், பொம்மை (உருவ) கடவுள்கள் எவ்வகையில் மேலானவர்கள்? ஜமீன்தாரர்களின் தர்பாருக்கும், மடாதிபதிகளின் தர்பார், பொம்மைக் கடவுள்களின் தர்பார் ஆகிய இவைகளுக்கும் என்ன வித்தியாசம் காணமுடியும்? ஜமீன்தாரருக்கு ஜரிகைக்குல்லாய் என்றால், நம மடாதிபதிக்கோ தங்கக் குல்லாய், நம் பொம்மைக் கடவுள்களுக்கோ, வைரக்கல், கெம்புக்கல், மரகதக்கல் பதித்த நவரத்தினக் குல்லாய்கள் இருந்து வருகின்றன. ஜமீன்தாரர் குல்லாய் விலை 10 ரூபாயானால், மடாதிபதி குல்லாய் விலை 1000 ரூபாய்க்குமேலும். கடவுள் குல்லாய் 10,000 1,00,000. சில 10,00,000 லட்சரூபாய் பெறுமானத்திற்கு மேலும இருக்கின்றன. ஜமீன்தார் வாகனம் மோட்டார்காராய் இருந்தால், மடாதிபதி வாகனம் தந்தப் பல்லக்கு, தங்கப்பல்லக்குகளாகவும், பொம்மைக் கடவுள்கள் வாகனம் வகையறா வெள்ளிக் குதிரை, வெள்ளித்தேர், தங்கக் குதிரை, தங்கரதம், முத்துப் பல்லக்கு, முத்துச் சொக்காய், நவரத்தினம் பதித்த செருப்புகள், தங்க ஓடு போட்ட வீடுகள் இப்படியாக மதிப்பில் அடங்காத அளவு ஆடம்பரமாக வீணாக இருந்து வருகின்றன. ஒரு வருஷத்தில் எந்த ஜமீன்தாரனுக்கும் வரும்படி வராத அளவுக்குச், சில கடவுள்களுக்கு ஒரு வருஷத்திற்கு 10 லட்சம் 20லட்சம் 33லட்சம் ரூபாய் என்கின்ற அளவில் வரும்படி வருகின்றன. இப்படியாகவெல்லாம் பெரும் பெரும் செல்வம் வரக்கூடிய பல ஸ்தாபனங்கள் இருக்கும்போது, இவற்றால் பொதுமக்களுக்கு முட்டாள்தனத்தைவிட, காட்டுமிராண்டி உணர்ச்சியைவிட வேறு ஒன்றும் பெரும்பாலோருக்கு உண்டாகாதபடி, வீணாக்கிக்கொண்டு இருப்பதை அனுமதித்துக்கொண்டும், அவைகளைப் பறிமுதல் செய்யாதபடி விட்டுக்கொடுத்துக்கொண்டும், ஒரு சர்க்கார் இருந்துகொண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டம் என்று ஒரு கூட்டத்தார் விஷயத்தில் மாத்திரம் இவ்வளவு துரிதமான நடவடிக்கை எதற்காக என்பது நமக்குப் புரியவில்லை.

நமக்கு எட்டினவரை இந்த ஜமீன்தாரர்கள் 100க்கு 99 பேர் திராவிடர்கள் என்பதல்லாமல், 100க்கு 90 பேர் ஆரியர்களைச் சுவாமிகளே! என்று அழைத்து எழுந்து நின்று வரவேற்பது என்பன இல்லாமல், சமுதாயத்தில் அவர்களுக்கு, அவர்களை யறியாமலே சுயமரியாதை யுணர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்பதல்லாமல் வேறு காரணம் ஒன்றுமே புலப்படவில்லை.

மேலும் இன்றைய சர்க்கார் ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது என்பது, இந்த சாக்கில் இனாம்தாரர்களுக்கும் மடங்களுக்கும் கடவுள் சொத்துக்களுக்கும் என்று ஆரியர்களுக்கு தாராளமாக நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்கின்ற வஞ்சக


# "குடி அரசு"

★

**22-11-47** முதல் **16**-பக்கங்கள்:

விலை **2**-அணா: வருட சந்தா ரூ. **7—0—0.**

பெரியார் அவர்களால்

நடிப்புக்கு ஏற்ற முறையில் அமைக்கப்பட்ட,

"உண்மை இராமாயணம்"

வால்மீகியால் எழுதப்பட்டபடி உண்மைத்தன்மை விளங்க தொடர்ந்து வெளிவரும்.

மற்றும், கைவல்யம், சித்திரபுத்திரன், ஈட்டி, ஊர் சுத்தி, பொதுக்கி, தெள்ளுமணி ஆகியவர்களின் கட்டுரைகளும், பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, சினிமா, நாடக விமர்சனப் பகுதி, சிறு கதைப் பகுதி ஆகியவைகளுடனும் நல்ல முறையில் வெளிவரும்.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

எண்ணத்தை உள்வைத்தே ஜமீன்தார்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க முன்வந்திருக்கின்றதே அல்லாமல் இந்த தர்மதேவதை நீதிதேவதை எண்ணம் சிறிதும் இல்லை. இதனால் ஜமீன்களுக்குக் கொடுப்பதைவிட பலமடங்கு, விகிதம் பணம் நஷ்டஈடாகப் பார்ப்பனர்களுக்குக் கொடுக்கப்படப் போகின்றது என்பதில் சந்தேகமே இல்லை. இந்த நஷ்டஈட்டால், [illegible] தலை [illegible] யாத [illegible] போகின்றது என்[illegible] சந்தேகமில்லை.

இன்றையக் கணக்குப்படி, இவர்களுக்குக் கொடுக்கப்போகும் நஷ்டஈட்டுத் தொகை "10-கோடி ரூபாய்" என்று சொல்லப்படுகின்றது. இதைச் சுத்த "ஹம்பக்" என்றே சொல்லலாம் எப்படியும் 50 கோடிக்குக் குறையாமல் 70, 80 கோடி ரூபாய்களை எட்டிப் பார்க்கும். தாராளமாகக் கொடுக்கவேண்டும் என்று மேலிடத்துச் சிபார்சை ஆக்கினையாக வாங்கியாய்விட்டது. இது அதாவது இந்தப் பித்தலாட்ட ஜாலத்தை இந்த நாட்டுக்கு அவசியமில்லாத தொல்லையாக ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சர்க்கார், பொறுப்புள்ள யோக்கியமான சர்க்காராய் இருக்குமானால், இந்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்து இந்த ஸ்தாபனங்களையும் வசப்படுத்திக்கொண்டு இவற்றின் வரும்படிகளால், நாட்டில் குடியானவர்களுக்குப் பூமி வரியே இல்லாமல் செய்துவிடலாம். "சுயராஜ்ஜியம் வந்தால் வரியே இருக்காது" என்று சொன்னவர்கள், குறைந்த அளவு உழுகும் குடியானவர்களுக்கு—பூமி உடையவர்களுக்கு எந்த வரியும் இல்லாமல் செய்துவிடலா[illegible]. இப்படி செய்யாமல் புது வரியும் போட்டு, நாடு கடன்கார நாடாகவும் ஆவதென்றால் இது எவ்வளவு கொடுங்கோன்மை என்பதைச் சொல்ல வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

இப்போது இந்தக் கடன் வாங்கும், குறைந்தது 50 கோடி ரூபாயும் செல்வவான்களுக்கே சோம்பேறி வாழ்வுக்காரர்களுக்கே போய்ச் சேரப்போகின்றது. இந்தத் தீர்க்கவேண்டிய பொறுப்பு அவ்வளவும், ஏழைக் குடியானவன் மீதும், பாடுபடும் உழைப்பாளி மீதுமே போய்ச் சேரப்போகின்றது. இவையல்லாமல் குறுக்கே இருக்கும் இந்த முன் சொன்ன கும்பலைச் சேர்ந்த நடுமனிதனும் (தரகனும்) கொள்ளையடிக்கப் போகின்றான்.

உழாதவனுக்குப் பூமி இல்லை என்றால், ஜமீன்தாரனுக்கும் இனாம்தாரனுக்கும் சாமிக்கும் பூமி எப்படிச் சொந்தமாகும்? அதிலும் பார்ப்பானுக்குப் பூமி ஏது? எப்படியிருக்க முடியும்? பார்ப்பான் பூமி உழுகிறது என்பது அவன் மத தர்மத்திற்கு விரோதம், சாஸ்திரத்திற்கு விரோதம் என்பதல்லாமல், இன்று அநுபவத்திலும் எந்தப் பார்ப்பானும் பூமி உழுவதை நாம் காணமுடிவதில்லை. ஆதலால் இப்போது இந்த நாட்டில் இருக்கும் பல விதமான நெருக்கடிகளுக்கும் பரிகாரம் ஜமீன், இனாம், மடம், கோவில் ஆகியவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, அவற்றின் வரும்படியைக் கொண்டு வரிகளை நீக்கி, மற்றும் தொழிற்சாலைகளுக்கு[illegible] ரிசர்வ் பண்டு நீக்கி ஏழை மக்கள் பங்குக்கு நியாயம் கொடுத்துவிட்டு, அவைகளைத் தேசியமாக்கிக் கொண்டு வேலை செய்தால்; நம்நாடு உலகத்திலேயே தலைசிறந்த நாடாகவும் மக்கள் எவ்வித நெருக்கடிக்கும் ஆளாகாமலும் இருக்கும்படியான நிலையை அடையலாம். இல்லாவிட்டால், நாம் என்றென்றும் துக்க வாழ்வில், இழிதன்மையில் இருக்க வேண்டியவர்களாகவே ஆவோம். அதாவது தஞ்சாவூர் ஜில்லா மிராசுதாரர்கள் எப்படித் தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்கள் மாடுகளை உழவச்சாமான்கள் போல், என்றென்றும் தங்களுக்கு அடிமையாய் இருக்கும்படி, வீடு வாசல் அற்றவர்களாகவும் எப்போதும் பிள்ளை குட்டிகள் உள்படத் தங்களுக்குக் கடன்காரர்களாக இருக்கும்படியும் வைத்துக்கொண்டு வாழுகின்றார்களோ, அதுபோலவேதான் நம் நிலைமையும் இருக்கப்போகின்றது. இதன் உண்மையைச் சுயராஜ்ஜியம் வந்த பிறகு கூட, நாம் எப்படி முன்பு அன்னியன் ராஜ்ஜியம் என்பதில் இருந்தோமோ, அதைவிட மோசமாகச் சோறு, துணி, வீடு, பாதுகாப்பு இல்லாமல் பரிதவிக்கின்றோமே, அதைக் கொண்டே பார்த்துக்கொள்ளலாம்.

ஆதலால் ஜமீன் இனாம் ஒழிப்பு என்பது ஒரு பெரிய பித்தலாட்டமும் வஞ்சகமுமான காரியம் என்பதே நமது கருத்தாகும்.

## பச்சையப்பன் கல்லூரி:

### வேண்டுகோள்

★

சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு ஒரு பார்ப்பனரல்லாத, அதாவது, திராவிட பிரின்ஸ்பாலை நியமிக்க வேண்டும் என்று மாணவர் கழகங்களும், திராவிடர் கழகங்களும், தமிழர் சங்கங்களும் பொதுக்கூட்டங்கள் கூட்டி, தீர்மானங்கள் செய்து, பச்சையப்பன் டிரஸ்ட் போர்டுத் தலைவருக்கு (பச்சையப்பன் கல்லூரி, சேத்துப்பட்டு, சென்னை) அனுப்புமாறு கோரப்படுகின்றனர்.

மத்திய திராவிடர் கழகம்.

## புதுக்கோட்டையில் திராவிடர் கழகம்.

இந்தியா என்ற துணைக்கண்டத்தை ஆண்ட தமிழரசு, இன்னும் இறந்துபடவில்லை என்று நினைப்பூட்டிவருவது, தமிழ் மன்னர் ஆண்டுவரும் புதுக்கோட்டை சமஸ்தானமாகும். இவ்வாறு திராவிடர்கள் பெருமைப்படும் புதுக்கோட்டையின் ஆட்சிக்கு, ஒரு தமிழரசர் என்பது பெயரளவிலேயே தவிர, நடைமுறையில் பச்சை ஆரியமே ஆண்டு வந்திருக்கின்றது என்ற உண்மையைத் தெரிந்தவர்கள், புதுக்கோட்டையில் ஒரு திராவிடர் கழகம் என்பதைக் கேட்கும்போது, நிச்சயமாக ஆச்சரியமடைந்தே தீருவர். இந்த நிலையில் புதுக்கோட்டைத் தனியரசு திராவிடர் கழகத்தைத்

தோற்றுவித்தவர்களை நாம் பாராட்டுகின்றோம். மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

சமஸ்தானங்களின் ஆட்சி உண்மையாகவே நூற்றுக்கு நூறு மக்களாட்சியாக மலர வேண்டுமென்பதிலே நமக்குத் தடையில்லை அதுதான் திராவிடர்கழகத்தின் நோக்கமுமாகும். ஆனால், பொறுப்பாட்சி என்ற பெயராலே, நூற்றுக்கு மூன்றுபேரோ அல்லது 100க்கு 10, 12 ஓட்டர்கள் தெரிந்தெடுத்த நபர் என்போரோ கொண்டோ பச்சை ஆரிய ஆட்சிக்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதே நம் கருத்து.

இம்மாதம் 15ம் நாள் நடைபெறவிருக்கும் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியிலே, திராவிடர் கழகமும் ஒத்துழைக்க விருக்கின்றது என்பதையறியும்போதுதான் நாம் இதைக் குறிப்பிடவேண்டியிருக்கின்றது.

திருவிதாங்கூருக்குப் பொறுப்பாட்சி என்று பெயர். மைசூருக்குப் பொறுப்பாட்சி என்று பெயர். ஆனால் உண்மையான நடவடிக்கை என்ன? வெள்ளை நிற ஆரியன் ஆட்டிவைக்க, ஆடிவந்த சமஸ்தானங்கள், தவுட்டு நிற ஆரியன் ஆட்டிவைக்க ஆடிவரும் சமஸ்தானமாக, சமஸ்தானத்திலுள்ள சில சுயநலக் கும்பலாக மாறியிருப்பதையே காண்கின்றோம். ஏன், இந்தியாவுக்கு விடுதலை என்பதே, ஆரியத்திற்கு விடுதலையாகவும், பாட்டாளிகளுக்குப் பழைய கருப்பனே கருப்பனாகவும் தானே இருக்கின்றது.

புதுக்கோட்டைப் பொறுப்பாட்சிக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்குபவர் ஒரு பச்சை ஆரியர். ஆரியரது ஆதிக்கமாகவேயிருந்த புதுக்கோட்டையில் திவானும் ஒரு திராவிடராக, மந்திரிகளும் இரு திராவிடராக இருப்பதைக் காணும்போது (நடவடிக்கையில் திராவிடருக்குச் சலுகை எதுவுமில்லை என்றாலும்) ஆரியம் வயிறெரியத்தானே செய்யும். வயிறெரிந்த ஆரியத்தின் போக்கே இப்பொழுது தோன்றியிருக்கும் பொறுப்பாட்சிக் கிளர்ச்சி என்பது நம் கருத்து.

திராவிடர்களைப் பலிகொடுத்து, பலி கொடுக்கும் காலத்தில் பின்னணியில் நின்று பிடர் பிடித்துத் தள்ளி, காரியம் கைகூடுங்காலத்தில் முன்னணியில் நின்று முதலிடம் பெற்று ஆளுவதே இந்நாட்டு ஆரியத்தின் போக்கு என்பதும் அதை மாற்றுவதற்கென்றே தோன்றி வளர்ந்ததே தான் நம் திராவிடர் கழகம் என்பதும் நாம் புதுக்கோட்டைத் திராவிடர் கழகத்தாருக்கு எடுத்துக் கூற விரும்புகின்றோம்.

ஆரியம் காலத்திற்குக் காலம் உருவை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தி என்பதும் அதன் பசப்பிலே மயங்குதல் கூடாது என்பதுமே திராவிடர்கள் கற்றுவரும் பாடமாயிருக்கின்றது என்பதையும் எடுத்துக்கூற விரும்புகின்றோம்.

காலமறிந்து, பயனறிந்து கிளர்ச்சியில் ஈடுபடுதலே வெற்றியைத் தரும் என்பதையும் இப்போதுள்ள நிலைமை ஆரியர்கள் எதைச் செய்தாலும் வெற்றியையே கொடுத்து வருகின்றது என்பதையும் புதுக்கோட்டைக் கழகத்தார் எண்ணிப் பார்த்து, திராவிடக் கழகத்தின் மற்றையச் செயல் முறைகளிலே, முக்கியமாகப் பிரச்சார வேலையிலே தீவிரமாக ஈடுபட வேண்டுமென்பது நமது ஆசை. ஏனென்றால் ஆரியம் செய்த இருட்டடிப்பினால் உண்மையான யோக்கியமான சீர்திருத்த எண்ணத்தையே விஷமாகக் கருதும் மக்கள் நிரம்பியது புதுக்கோட்டை சமஸ்தானம்.

ஆதலால் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியிலே பங்கு பெற எண்ணும் திராவிடர் கழகம், எச்சரிக்கையாக இருந்து இதனைப் பெரிதும் சிந்தித்து பணியில் இறங்க வேண்டுகின்றோம்.

## ஆகஸ்டு 15ம் தேதியின் அர்த்தம் என்ன?

☆

இந்திய ஆட்சியில் வெள்ளையர்களின் ஏஜண்டுகளாக இருந்தவர்கள் எவர்களோ, அவர்கள் ஆகஸ்ட்டுப் பதினைந்தாம் தேதியிலிருந்து, இந்தியாவிற்கு எஜமானர்களாக ஆனார்கள்.

எப்படி?

ஆட்சி, அதிகாரம், காரியக்கிரமம், யாவும் ஒரே மாதிரிதான், என்கின்ற தன்மையில்!

அதாவது

திராவிட மக்களுக்கு வெள்ளை நிற எஜமானனுக்குப்பதில், தவிட்டு நிற (ஆரிய) எஜமானன் ஏற்பட்டான்.

ஆனால்

பெயர் மாத்திரம் மாற்றமடைந்தது.

என்ன மாற்றம்?

"அது—அன்னிய ஆட்சி"

"இது—சுய ஆட்சி"

யாருக்குச் சுயாட்சி?

ஆரியனுக்குத்தான்.

திராவிடனுக்கு என்ன ஆட்சி ஆயிற்று?

கொடுங்கோல் (மனு) ஆட்சிதான். என்ன சொல்லுகிறாய்? திராவிடனே! அன்பனே!

பிரிட்டிஷ் கிறிஸ்துவக்கொடி இந்த நாட்டில் புகுந்து, இஸ்லாம் (மகம்மது) கொடியை இறக்கியது. 200 வருடம் பறந்தது. இன்று ஆரிய மனுக்கொடி, பிரிட்டிஷ் கொடியை இறக்கித் தன்னுள் அடக்கிக்கொண்டு "பச்சை" மனுக்கொடியாக உயர்த்திவிட்டது. அது திராவிட மக்களைப் பார்த்து, 'ஏ திராவிடா! நீ சூத்திரன் பஞ்சமன். நாலாவது ஐந்தாவது பிறவி, நான் பிராமணன். முதலாவது பிறவி. நீ மலம் மிதிக்கும் காலில் பிறந்தவன். நான் கிரீடம் அணியும் தலையில் பிறந்தவன். நீ தாசன், நான் தேவன். உன் தாய் மனைவி மகள் எங்களுக்குத் தாசிகள்; சூத்திரச்சிகள். என் தாய் மனைவி மகள் பிராம்மணிகள், நான் பிரம்மஸ்ரீ, இனி என்னைப் பார்ப்பனன் என்று சொல்லாதே. நீ அடிமை, இனி உன்னைத் திவான் பகதூர் என்றோ, ராஜா என்றோ, ஜமீன்தார் என்றோ. மகாராஜா என்றோ சொல்லிக்கொள்ளாதே. திருவடி சம்பந்தி என்று சொல்லிக்கொள். தகுதி திறமை உயர்வு எனக்கே உரியது. எதையும் உரிமைகொண்டு கேட்க உனக்கு அருகதையில்லை. உழைப்பது உன் கடமை. நிறைந்து வழிய உண்பது என் கடமை. இனி பிரிட்டிஷ் கொடிக்கோ, இஸ்லாம் கொடிக்கோ, இந்நாட்டில் வேலையில்லை. இருக்க இடமில்லை. இப்படியிருக்கச் சூத்திரக் கொடி (திராவிடக்கொடி) இந்நாட்டில் பறக்க இடம் கொடுப்பேனா?" என்று சொல்லுகிறது. என்ன சொல்லுகிறாய் திராவிடனே?

(2ம் பக்கத்தொடர்ச்சி)

அல்ல என்பது மட்டுமல்ல. அந்த என்ன பொருளோ, அந்தப் பொருளுக்கும், திராவிட நாட்டில் கொண்டாடுகின்ற தீபாவலிக்கும் பொருத்தமேயில்லை. விளக்கு வரிசை என்பது கார்த்திகைக்குப் பொருந்துமே ஒழிய தீபாவலிக்கு எவ்வாறு பொருந்தும்.

சொல்லும் தமிழில்லை; பொருளும் பொருத்தமில்லை, என்பதுமட்டுமல்ல. தீபாவலி கொண்டாடுகின்ற மாதமும் நாளும் மணியும் கூட விழாவுக்கு ஏற்றவையல்ல.

ஐப்பசி மாதம், பலவர் மொழியிலே கூதிர்க்காலம். கூதிர்க்காலம் உடம்பிற்குக் குளிர்த்தொல்லை தருங்காலம். மேலும் ஆண் பெண் கூட்டுறவிற்கு ஏற்ற காலம்.

விழாக் கொண்டாடுகின்ற நாளோ, தேய்பிறையை ஒட்டிய நாள். (அமாவாசை ஒட்டிய நாள்) நல்ல இருட்டுநாள்.

மணியோ, நான்குமணியளவு

உடல் நடுங்கும் நேரத்திலே, மையிருட்டிலே, உறக்கம் தெளியாத நிலையிலே, ஒரு விழாவென்றால், விழாவென்பதற்கே பொருள் தெரியாதவர்கள் என்று கூறவேண்டுமே தவிர, வேறு என்ன கூறமுடியும்? நீங்கள் தான் சிந்தித்துப் பாருங்கள். இந்தத் தீபாவலியைத்தவிர வேறு எந்த ஒரு விழாவாவது அமாவாசையில் கொண்டாடப்படுகிறதா? மற்ற வைதீக விழாக்கள்கூட வளர்பிறையில் கொண்டாடப்படுமே தவிர தீபாவலியைப்போலத் தேய்பிறையில் கொண்டாடப்படுவதில்லை.

சொல்லும் பொருத்தமில்லை, பொருளும் பொருத்தமில்லை, காலமும் பொருத்தமில்லை என்பது மட்டுமல்ல. விழாக் கொண்டாடுகின்ற முறையிலும் கூடச் சிறப்பில்லை.

இந்தத்தீபாவலிக்குக்கூறப்படும் கதையிலிருந்து, ஆரிய-திராவிடர் போராட்டமே ஓரளவு மாற்றி மறைத்துக்கூறப்பட்டிருக்கிறது என்று கூறினால் உங்களால் மறுத்துக்கூற முடியுமா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

"ஆரியர் குடியேறிய காலத்தில், அவர்களை குடியேறவிடாமல் தடுத்த அரசர் இந்நாட்டில் பலருண்டு. அவர்களில் ஒருவனே நரகாசுரன் என்பவன். (அவனுக்கு ஏதோ வேறு பெயர் இருந்திருக்க வேண்டும்) அவன் மிகுந்த வலிமையுடையவன். அந்த வலிமையுடைய திராவிட அரசனை, ஆரியர்களுக்குள் ஒருவனாகிய, தந்திரச் செயல்கள் நிறைந்த கிருஷ்ணன் என்பவன் (இவனுக்கும் இதுதான் பெயரோ வேறோ) எதிர்த்தான். பல தந்திரங்களைக் கையாண்டான். இறுதியில் போருக்கும் வந்தான், புறமுதுகிட்டு ஓடினான், ஓடிய

## 'கதிரவன்' நிர்வாகிகள். இலங்கை புறப்பாடு

"கதிரவன்" கௌரவ நிர்வாகி ஜனாப் பாவலர் எஸ். எஸ் அப்துல் காதர் அவர்களும், நிர்வாகி ஜனாப் எஸ் எம். ஜக்கரியா அவர்களும் 5-11-47 பகல் 2-30 மணிக்கு விமானத்தில் இலங்கை புறப்பட்டனர். "கதிரவன்" ஆசிரியர் தோழர் ப. செல்வராஜ் அவர்களும் கஸ் பி. வேதாந்தம் அவர்களும், மற்றும் பல தோழர்களும் விமானகூடத்தில் அவர்களுக்கு வாழ்த்துக்கூறி வழியனுப்பி வைத்தனர்.

இலங்கையில் இவர்களை நேரில் சந்திக்க விரும்புவோர் "கதிரவன்" கிளை நிலையம் 112-டம் தெரு, கொழும்பு என்ற இடத்தில் சந்திக்கலாம்.

---

கிருஷ்ணன் என்பவன் தனது மனைவியைக்கொண்டு, அத்திராவிட அரசனை மாயவலையில் விழச்செய்தான். வலையில் விழுந்த அரசனைப் படுக்கையறையிலேயே பாதி கொன்றுவிட்டான். கொன்றதையே தீபாவலி என்று கொண்டாடப்பட்டு வருகின்றது இதை இப்படியே கூறிக் கொண்டாடினால், மற்றவர்களின் எதிர்ப்புக்கு ஆளாக வேண்டி வருமே என்று அஞ்சிய ஆரியம், அந்த அரசனை அசுரனாக்கி, அந்த அசுரனைப் பூமிக்கும் கடவுளுக்கும் பிறந்தவன் என்று கதை எழுதி வைத்திருக்கின்றது" என்று யாரேனும் ஒருவர் கூறினால் இதைப் பொய் என்று யாராவது துணிந்து கூறிவிட முடியுமா?

ஆண்மகனால் வெல்லமுடியாத ஒருவன், பெண்ணால் வெல்லப்பட்டான். எப்பொழுது? விடியற்காலம் நான்கு மணிக்கு. இந்தச் செய்தியைச் சிறிது மனதில் நிறுத்துங்கள்! இப்பொழுது எவ்வாறு எண்ணுகிறீர்கள்?

இந்த நிகழ்ச்சி இப்படித்தான் இருந்திருக்கவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. ஆனால் இப்படி ஏன் இருந்திருக்கமுடியாது என்று யாரேனும் கேட்டால், என்னால் மறுத்துக்கூற வியலாது! உங்களால் இயலுமா? சிந்தித்துப் பாருங்கள்.

தமிழ்நாடு தமிழருக்கே என்று முரசு கொட்டுகிற தோழர்களே! நீங்களும் சிந்தித்துப் பாருங்கள்.

தீபாவலியைத் திராவிடர்கள் கொண்டாடத்தான் வேண்டுமா? நீங்கள் கொண்டாடத்தான் போகிறீர்களா?

---

கடல் அலைகள் சூறாவளிக் காற்றில் சுமார் 50 அடியும், புயற்காற்றினால் 30 முதல் 40 அடியும் உயரத்தில் எழும்புமாம். அவற்றின் வேகம் மணிக்கு 20 முதல் 60 மைல் வரையில் இருக்குமாம்.

## மதிப்புரை

[மதிப்புரை வேண்டுவோர் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்]

### குரல்.

திங்கள் இதழ்: விலை ஐந்தணா.
வெளியீடு: மக்கள் மன்றம்.
1, பாலக்கரை, திருச்சி.

காற்றடிக்குது; கடல்குமுறுது; புயல் வீசுது; புரட்சி தோன்றுது; கண்ணைத் திறப்பாய் திராவிடனே! என்று குரல் எழுப்பி, திராவிடநாட்டின் சிறந்த எழுத்தாளர்கள் பலரின் எழுத்தோவியங்களையும் அணிந்து, பெரியார் அவர்களின் உருவை முகப்பினில் தாங்கி, குரலின் முதல் வெளியீடு வெளிவந்திருக்கிறது.

திராவிடத் தனியரசின் திட்ட அமைப்புகளை மக்களுக்கு விளக்கி; இடையறாது ஒலித்து; இன்பத்திராவிடம் காணப் பாடுபடுமென்று நம்புகிறோம்.

### தமிழ்க்குரல்

திங்கள் இருமுறை விலை 0—2—0
ஆசிரியர்: கு மா. பா.
இராயவரம் புதுக்கோட்டைத் தனியரசு.

ஐக்கிய இந்தியாவிலிருந்து அல்லாமலே, தமிழ்நாடு தனிக் குடியரசு செலுத்தவேண்டும் என்பதைக், குறிக்கோளாகக்கொண்டு உழைப்பது, இதன் நோக்கமென அறிகின்றோம்.

### தாருல் இஸ்லாம்.

ஆசிரியர்: பா. தாவுத்ஷா.
சென்னை.

சில ஆண்டுகளாக வெளிவராதிருந்த "தாருல் இஸ்லாம்" பொறுப்பாசிரியராக N. B. அப்துல் ஜப்பாரை ஏற்று (கிரவுன் 1X8 48 பக்கம்), திங்கள் இதழாக புத்துருவைப் பெற்று முஸ்லிம் சமூகத்திற்கு உழைக்க, வெளிவந்திருக்கும் முதல் இதழைக் கண்டோம்.

தமிழ் எழுத்துலகிற்குத் தாவுத்ஷா அவர்கள், மிகப் பழையவர். முஸ்லிம் தோழர்கள் மதில்மேல் பூனையாக இல்லாமல், நல்ல வழியை அறிந்து மேற்கொள்ளவும், மேற்கொண்டதை வெற்றி பெற நடத்தவும், தாவூத்ஷா அவர்களின் கைகள், தளராது பாடுபட வேண்டுமென்பது நம் ஆவல்.

---

புகையிலையில் பதினெட்டுவித விஷப்பொருள்கள் இருக்கின்றனவாம்.

Edited, Printed and Published by N. Karivaradasamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.